**இலங்கை றக்பி நிறுவகம் -2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை றக்பி நிறுவகத்தின் (''இலங்கை றக்பி நிறுவகம்'') 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, இலங்கை றக்பி நிறுவகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அறிக்கை முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் கணக்காய்வின் நோக்கெல்லை பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு (சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இ.நி.அ.நி) இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, இலங்கை றக்பி நிறுவனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது இலங்கை றக்பியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

இலங்கை றக்பி நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் இலங்கை றக்பி நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால்கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ்கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக சமுத்திர பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம்

செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை,பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது இலங்கை றக்பி நிறுவகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 5 மாகாண விளையாட்டுச் சங்கங்களுக்கு 2016 ஆம் வருடத்திலிருந்து 2019 ஆம் வருடம் வரை விளையாட்டு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்ட ரூபா 3.3 மில்லியன் ஆன முற்பணம் செலுத்தியமைக்கான 2016 தொடக்கம் 2019 ஆம் வருடம் வரையான பற்றுச்சீட்டுக் கொடுப்பனவுகள் மீளாண்டின் செலவுகளாக காட்டப்பட்டிருந்தது. | முற்பணங்கள் தீர்க்கப்படாத மாகாண சங்கங்களுக்கு எதிர்காலத்தில் நிதி வழங்கப்படும்போது அது கருத்திற் கொள்ளப்படும். | வெளித் தரப்பினருக்கு செலுத்த வேண்டிய தொகை அவ்வப்போது தீர்க்கப்படுவதற்கு விரைவான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.5.2 கணக்காய்விற்கான ஆவணச் சான்றின்மை

| விடயம் | தொகை ரூபா மில்லியன் | சமர்ப்பிக்கப்படாத சான்று | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| செலுத்த வேண்டிய கணக்கு | 15.3 | மீதி உறுதிப்படுத்தல்கள் | எதிர்காலத்தில் திருத்தம் செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் | பொறுப்புக்கள் தொடர்பாக போதியளவும் பொருத்தமானது மான கணக்காய்வு சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### 1.6.1 பெற வேண்டிய கணக்கு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| பெற வேண்டிய கணக்குகளில் உள்ளடக்கப்பட்டுள்ள 05 ஆண்டுகளாக காணப்பட்டு வருகின்ற விளையாட்டு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக 02 மாகாண் சங்கங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 1.2 மில்லியன் ஆன முற்பணம் தீர்ப்பனவு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் வருடத்தில் இந்த அனைத்து முற்பணங்களும் தீர்ப்பனவு செய்யப்படுவதற்கு சங்கங்கள் நடவடிக்கைகளை எடுத்துள்ளன. | முற்பணத்தொகை விரைவில் தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

#### 1.6.2 செலுத்த வேண்டிய கணக்கு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 02 வருடங்கள் தொடக்கம் 05 வரையான காலமாக காணப்பட்டு வருகின்ற ரூபா 3.3 மில்லியன் ஆன 51 கணக்குகள் மற்றும் மீளாய்வாண்டிற்கான ரூபா 2.5 மில்லியன் ஆன 08 ஏனைய செலுத்த வேண்டிய மீதிகள் என்பவற்றை தீர்ப்பனவு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. ரூபா 35 மில்லியன் ஆன வருடத்தின் ஆரம்ப கடன் மீதியில் ரூபா 3.1 | ஏற்றுக் கொள்ளப்பட்டத. | வெளியாருக்குச் செலுத்த வேண்டிய தொகையைத் தீர்ப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

மில்லியன் மட்டுமே மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 32.5 மில்லியன் மேலும் செலுத்த வேண்டியிருந்தது.

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை றக்பி அரசியலமைப்பின் 14.1(ஓ) மற்றும் (ஓ) பிரிவுகள் | மாகாண றக்பி கால்ப்பந்து சங்கத்தினால் ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்த பின்னர் 45 நாட்களினுள் பட்டயக் கணக்காளர் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட்ட நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்க வேண்டியுள்ள போதிலும், 04 மாகாண றக்பி கால்ப்பந்து சங்கங்களினால் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படாமை தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பெறப்படாத மாகாண சங்கங்களின் நிதிக்கூற்றுக்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. | இலங்கை றக்பி அரசியலமைப்பின் பிரகாரம் பட்டயக் கணக்காளர் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 658,202 மிகையாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 8,741,462 ஆகும். எனவே , நிதி விளைவுகளில் ரூபா 9,399,664 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. செலவுகள் ரூபா 13,804,113 ஆல் குறைவடைந்தமை இம்முன்னேற்றத்திற்கு காரணமாகும்.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2015 ஆம் வருடத்திலிருந்து 2020 ஆம் வருடம் வரை சர்வதேச மற்றும் உள்நாட்டு விளையாட்டு ஒலிபரப்பிற்காக வருடமொன்றிற்கு ரூபா 85 மில்லியன் ஆன அனுசரணை உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்ததுடன் 2021 ஆம் வருடத்திற்காகவும் அக்கம்பனி ரூபா 65 மில்லியன் ஆன அனுசரணையை செலுத்துவதற்கு உடன்பட்டிருந்தபோதிலும் அக்கம்பனிக்கு அல்லது வேறு கம்பனிக்கு அனுசரணை உரிமை வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாமையால் அனுசரணை வருமானம் நிறுவகத்திற்கு தவற விடப்பட்டிருந்தது. | டயலொக் நிறுவனம் ஒலிபரப்பு உரிமையற்ற சங்கங்களுக்கு அனுசரணைகளை மறுத்துவிட்டது.மேலும் டயலொக் நிறுவனத்துடன் உள்ள உடன்படிக்கை மூலம் றக்பி சங்கத்திற்கு வேறு அனுசரணையாளர் நுழையக்கூடாது என்ற நிபந்தனையை உட்படுத்தி அனைத்து விளம்பர உரிமைகளையும் அக்கம்பனி கோரியுள்ளது. ஆகையால் சங்கத்திற்கு வேறு அனுசரணையாளர் ஒருவர் கிடைப்பதில் சிக்கல் காணப்பட்டது. | சங்கத்திற்கு மிகவும் பயனுள்ள நிதிச் செயலாற்றலை பெற்றுக் கொள்வதற்குத் தேவையான அனுசரணை வருமானத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2019 ஆம் வருடத்திற்காக இலங்கை றக்பிக்கு உறுப்புரிமைக் கட்டணம் செலுத்தப்படாமையால் மேல்மாகாண மற்றும் ஊவா மாகாண றக்பி கால்ப்பந்து சங்கங்களின் , உறுப்புரிமை இரத்துக் செய்யப்பட வேண்டுமென 2020 ஆம் வருடத்தில் மேன்முறையீட்டு ஆலோசனைக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்டிருந்த போதிலும் அப்பரிந்துரையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேல்மாகாண சங்கம் 2020 ஆம் வருடத்திற்கான உறுப்பினர் கட்டணம் செலுத்தாமையால் மற்றும் அத்துடன் ஊவா மாகாண சங்கம் போட்டிகளை ஏற்பாடு செய்யாமையால் அவ் வருடத்திற்கான வாக்குரிமை மட்டும் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. | உறுப்புரிமை இரத்துச் செய்யப்பட்டிருந்த மாகாண றக்பி கால்ப்பந்து சங்கம் தொடர்பாக சங்கத்தின் சட்டங்கள் விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட. வேண்டும். |